இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை - அவர்களது

# மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, ஜூலை 3 -

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களை 30.06.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (01.07.2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், 30.06.2025 அன்று இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ஏழு மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகினையும் இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளதை தனது கடிதத்தில் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டே நாட்களுக்குள் மீனவர்கள் கைது செய்யப்படும் இரண்டாவது சம்பவம் இது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், பருவகால மீன்பிடித் தடைக்குப் பிறகு சமீபத்தில் தான் மீன்பிடித் தொழிலை மீனவர்கள் தொடங்கியுள்ளதாகவும், ஏற்கெனவே 48 இந்திய மீனவர்கள் இலங்கைக் காவலில் உள்ள நிலையில், இத்தகைய தொடர் கைது நடவடிக்கைகள் மீனவ சமூகத்தினரிடையே கடுமையான துயரத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தி வருகிறது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை ஒன்றிய அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் உறுப்பினர் திருமதி ரேகா பிரியதர்ஷினி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

மொழிக்காக போராடும் சூழலை ஒன்றிய பா.ஜ.க. அரசு உருவாக்கியுள்ளது!

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ தமிழ்நாடு முழுவதும் பேரலையாக எதிரொலிக்கிறது!

## கடலூரில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேட்டி!



கடலூர், ஜூலை 3-

மொழிக்காக போராட வேண்டிய சூழ்நிலையை ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளது ,என கடலூர் மாநகர கழக அலுவலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கூறினார்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 1.7.2025, செவ்வாய்க்கிழமை , மதியம் 3மணியளவில் ,கடலூரில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

“ஓரணியில் தமிழ்நாடு “என்ற பிரச்சார இயக்கத்தை முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.07.2025) தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழகம் முழுவதும் அது பேரலையாக எதிரொலிக்கிறது.

கடலூர் மாவட்டத்திலும் இன்று முதல் தொடங்க உள்ளோம். 45 நாட்கள் தொடர்ந்து ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரம் வாரியாக மூலை முடுக்கெல்லாம் சென்று ஒவ்வொரு ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்று இந்த பிரச்சாரத்தை இயக்கத்தில் முழுமையாக ஈடுபட்டு நிறைவேற்றுவோம்.

தமிழ்நாட்டின் வரலாற்றை நாட்டிற்கு, உலகற்கு தெரியப்படுத்தக் கூடாது என்பதில், ஒன்றிய அரசு தீவிரமாக உள்ளது. தமிழர் நாகரிகம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது.

தமிழ் மண்ணில் வாழ்ந்தவர்கள் உலோகம்,செம்பு, இரும்பு, தங்கம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தியும், மண்பாண்டங்கள் பயன்படுத்தியும் நாகரீகத்தை உலகிற்கு கற்றுக் கொடுத்த சமூகம் தமிழ் சமூகம்.

இதனை மக்களிடையே சென்றடைய கூடாது என்பதற்காக ஒன்றிய அரசு சூழ்ச்சி செய்கிறது.

ஒன்றிய அரசுடன் இங்குள்ள எதிர்க்கட்சிகளும் சேர்ந்து கொண்டு சூழ்ச்சி செய்கின்றனர். நாங்கள் மக்களுடன் இணைந்து தமிழ் மண் மற்றும் தமிழ் மொழியை காக்க இந்த பிரச்சார இயக்கம் தொடங்கியுள்ளோம்,.

நாளை அனைத்து ஒன்றியம்,நகரம்,பேரூர் பகுதிகளில் கழக பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. 3ம் தேதி அனைத்து வாக்கு சாவடிகளிலும் ஓரணியில் தமிழகம் என்ற பயணம் தொடரும். தி.மு.க.வில் இணைய விருப்பம் உள்ளவர்கள் செயலி மூலமாக பதிவு செய்து கொள்ளலாம். வருகிற 14 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரம் நகரில் அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தர உள்ளார்கள்.

மேலும் இளையபெருமாள் மணிமண்டபத்தையும் திறந்து வைக்க உள்ளார்.

3000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வரலாறு தமிழ் மண்ணுக்கு உள்ளது.

தமிழ்நாட்டின் வரலாற்றை நாட்டுக்கு தெரியப்படுத்தக் கூடாது என்று ஒன்றிய அரசு உள்ளது. அதற்கு எதிர்க்கட்சிகளும் உடந்தையாக உள்ளன. நாங்கள் மக்களுடன் சேர்ந்து பணியாற்றுவோம்.

தமிழ் நாடுமுதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு மக்கள் சார்ந்த ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

தனிநபருக்கு பலன் தரும் ஆட்சியாக உள்ளது. ஒரு கோடியே 15 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை வழங்கப்படுகிறது. மகளிர் விடியல் பயணம் மூலம் மகளிர் பயனடைந்து வருகின்றனர். 60 லட்சம் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இல்லம் தேடி மருத்துவம் திட்டமும் உள்ளது இது கடந்த கால ஆட்சியில் இல்லாத சாதனையாகும். சாதனைகளை மக்களிடம் கூறி ஓரணியில் சேர்க்க உள்ளோம்.

இதில் மக்களின் இசைவு பெற்று அவர்கள் ஒப்புதல் தந்த பிறகு உறுப்பினராக சேர்ப்போம், கடலூர் மாவட்டத்தில் 60% வாக்காளர்களை சேர்க்க இலக்கு நிர்ணயத்துள்ளோம்.

ஒன்றிய அரசு மாணவர்களின் கல்வியில் கை வைத்துள்ளது. நிதி ஒதுக்கீடு செய்வதில் பாரபட்சம் காட்டு கிறது. மற்ற மாநிலங்களை விட அதிக அளவு ஜிஎஸ்டி வசூல் செய்து தரும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

ஆனால் மற்ற மாநிலங்களை விட நமக்கு குறைவாக நிதி ஒதுக்கப்படுகிறது. மேலும் இந்தி திணிப்பிலும் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டில் படித்தவர்கள வெளிநாடுகளுக்கு சென்று பணியாற்றுகிறார்கள். வட மாநிலத்தவர்கள் இந்தி மட்டுமே தெரிந்ததால் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள். இவ்வாறு செய்தியாளர்களிடம் கூறினார்.

கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கழக பொறியாளர் அணித்தலைவர் துரை கி. சரவணன், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ , மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, மாநகர செயலாளர் கே.எஸ். ராஜா, பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் வடக்கு நகர தி.மு.க. இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா, தி.மு.க. அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரப் பொதுக்கூட்டம் கம்பம், பாவலர் படிப்பகம், கலைஞர் நூலகம் அருகே நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கம்பம் வடக்கு நகர திமுக இளைஞரணி அமைப்பாளர் அ.கலில்ரகுமான் தலைமை தாங்கினார். கம்பம் வடக்கு நகர தி.மு.க. செயலாளர் எம் சி வீரபாண்டியன். வரவேற்புரை ஆற்றினார். தேனி தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், துணை அமைப்பாளர் கராத்தே ராமகிருஷ்ணன், கம்பம் தெற்கு நகரச் செயலாளர் பால்பாண்டி ராஜா, வடக்கு நகர் அவை தலைவர் அப்துல் ரஹீம், வடக்கு நகர பொருளாளர் சோமசுந்தரம் முன்னிலை வகித்தார். மாநில கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் இரா. பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குரு குமரன், கழக இளம் பேச்சாளர் கனிஷ்டா, திமுக கழகப் பேச்சாளர் முருகேசன்ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள். கூட்டத்தில்,நகர் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சந்துரு, சேக் அப்துல் காதர், தமிழரசன், ஹரிஹரன், துணை செயலாளர்கள் சுருளி, சஹானா சாதிக், மாவட்ட பிரதிநிதிகள் சரவணன், ஜெகதீசன், சொக்க ராஜா , மற்றும் மாவட்ட, நகர சார்பணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு செயலாளர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுகவினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கம்பம் வடக்கு நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜெ.ராஜேஸ்குமார் நன்றி கூறினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 05.07.2025 | தோவாளை வடக்கு ஒன்றியம் | காட்டுப்புதூர் | செ.தாமோதரன், ஆ.விஜயராஜா |
| 2 | 06.07.2025 | ரீத்தாபுரம் பேரூர் | ரீத்தாபுரம் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 3 | 08.07.2025 | தோவாளை கிழக்கு ஒன்றியம் | தோவாளை சந்திப்பு | செ.செல்வகுமார், ஏ.ஏஞ்சலின் |
| 4 | 09.07.2025 | பூதப்பாண்டி பேரூர் | பேருந்து நிலையம் | சி.அன்பழகன், ஆ.விஜயராஜா |
| 5 | 13.07.2025 | கன்னியாகுமரி நகரம் | கன்னியாகுமரி ரவுண்டானா, அண்ணா சிலை முன்பு. | சி.அன்பழகன் ஏ.ஏஞ்சலின் |
| 6 | 14.07.2025 | வில்லுக்குறி பேரூர் | வில்லுக்குறி சந்திப்பு | செ.செல்வகுமார், ஏ.ஏஞ்சலின் |
| 7 | 16.07.2025 | வால்வச்சகோஷ்டம் பேரூர் | பள்ளியாடி | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 8 | 18.07.2025 | கணபதிபுரம் பேரூர் | கணபதிபுரம் | ஜஸ்டின் வில்பிரட், ஆ.விஜயராஜா |
| 9 | 19.07.2025 | திங்கள் நகர் பேரூர் | பேருந்து நிலையம் அருகில், திங்கள் நகர். | எஸ்.கே.ரஹ்மான் ஏ.ஏஞ்சலின் |
| 10 | 20.07.2025 | குளச்சல் நகரம் | காமராஜர் பேருந்து நிலையம் அருகில் | செ.செல்வகணபதி ஆ.விஜயராஜா |
| 11 | 20.07.2025 | நாகர்கோவில் மாநகரம் கிழக்குப் பகுதி | ரயிலடி திடல் | எஸ்.கே.ரஹ்மான் ஜெ.ஜெபின் |
| 12 | 21.07.2025 | தாமரைக்குளம் பேரூர் | தாமரைக்குளம் | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 13 | 22.07.2025 | மருங்கூர் பேரூர் | ராஜாவூர் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |
| 14 | 23.07.2025 | முளகுமூடு பேரூர் | முளகுமூடு | ஜஸ்டின் வில்பிரட், ஜெ.ஜெபின் |
| 15 | 24.07.2025 | அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம் | மகாராஜபுரம் | எஸ்.கே.ரஹ்மான் ஏ.ஏஞ்சலின் |
| 16 | 25.07.2025 | மயிலாடி பேரூர் | மயிலாடி சந்திப்பு | எஸ்.கே.ரஹ்மான் ஆ.விஜயராஜா |
| 17 | 26.07.2025 | நெய்யூர் பேரூர் | பெத்தேல்புரம் | எஸ்.கே.ரஹ்மான் செ.நா.நதிஷா |
| 18 | 27.07.2025 | கல்லுக்கூட்டம் பேரூர் | உடையார்விளை சந்திப்பு | செ.தாமோதரன், ஜெ.ஜெபின் |
| 19 | 28.07.2025 | அகஸ்தீஸ்வரம் பேரூர் | அகஸ்தீஸ்வரம் | சி.அன்பழகன், ஜெ.ஜெபின் |
| 20 | 29.07.2025 | குருந்தன்கோடு கிழக்கு ஒன்றியம் | வெள்ளி சந்தை | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 21 | 29.07.2025 | இரணியல் பேரூர் | இரணியல் | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |
| 22 | 02.08.2025 | தக்கலை தெற்கு ஒன்றியம் | கண்டன்விளை | ஜஸ்டின் வில்பிரட் செ.நா.நதிஷா |
| 23 | 03.08.2025 | நாகர்கோவில் மாநகரம் தெற்குப் பகுதி | என்.ஜி.ஓ. குடியிருப்பு சந்திப்பு | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 24 | 05.08.2025 | தேரூர் பேரூர் | தேரூர் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஏ.ஏஞ்சலின் |
| 25 | 06.08.2025 | ராஜாக்காமங்கலம் வடக்கு ஒன்றியம் | ராஜாக்காமங்கலம் சந்திப்பு | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 26 | 08.08.2025 | புத்தளம் பேரூர் | புத்தளம் | ஜஸ்டின் வில்பிரட் ஆ.விஜயராஜா |
| 27 | 09.08.2025 | வெள்ளிலை பேரூர் | வெள்ளி மலை | ஜஸ்டின் வில்பிரட் செ.நா.நதிஷா |
| 28 | 10.08.2025 | ராஜாக்காமங்கலம் தெற்கு ஒன்றியம் | ஈத்தாமொழி சந்திப்பு | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 29 | 11.08.2025 | மணவாளக்குறிச்சி பேரூர் | மணவாளக்குறிச்சி | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 30 | 12.08.2025 | அழகிய பாண்டியபுரம் பேரூர் | பெருந்தலைக்காடு | சி.அன்பழகன், ஆ.விஜயராஜா |
| 31 | 13.08.2025 | அழகப்பபுரம் பேரூர் | அழகப்பபுரம் சந்திப்பு | செல்வ கணபதி, ஆ.விஜயராஜா |
| 32 | 14.08.2025 | குருந்தன்கோடு மேற்கு ஒன்றியம் | கட்டிமாங்கோடு | செ.செல்வகுமார் ஜெ.ஜெபின் |
| 33 | 16.08.2025 | அஞ்சு கிராமம் பேரூர் | அஞ்சு கிராமம் சந்திப்பு | செ.செல்வகணபதி, ஜெ.ஜெபின் |
| 34 | 17.08.2025 | சுசீந்திரம் பேரூர் | சுசீந்திரம் ரத வீதி | எஸ்.கே.ரஹ்மான் செ.நா.நதிஷா |
| 35 | 17.08.2025 | அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றியம் | இரவி புதூர் | சி.அன்பழகன் ஆ.விஜயராஜா |
| 36 | 18.08.2025 | ஆரல்வாய்மொழி பேரூர் | மருத்துவர் நகர் | எஸ்.கே.ரஹ்மான் ஆ.விஜயராஜா |
| 37 | 18.08.2025 | கொட்டாரம் பேரூர் | கொட்டாரம் | செ.தாமோதரன், ஏ.ஏஞ்சலின் |
| 38 | 24.08.2025 | கப்பியரை பேரூர் | செல்லக்கோணம் | செ.தாமோதரன், செ.நா.நதிஷா |
| 39 | 26.08.2025 | நாகர்கோவில் மாநகரம் மேற்குப் பகுதி | அரசு மருத்துவக் கல்லூரி பின்புறம், ஆசாரிப்பள்ளம். | செ.செல்வகுமார் ஏ.ஏஞ்சலின் |
| 40 | 30.08.2025 | தாழக்குடி பேரூர் | தாழக்குடி | செ.செல்வகுமார், ஆ.விஜயராஜா |
| 41 | 31.08.2025 | நாகர்கோவில் மாநகரம் வடக்குப் பகுதி | கிருஷ்ணன்கோவில் | சி.அன்பழகன் செ.நா.நதிஷா |
| 42 | 01.09.2025 | மண்டைக்காடு பேரூர் | மண்டைக்காடு | செ.செல்வகணபதி, ஆ.விஜயராஜா |

கன்னியாகுமரி

நாள் : 01.07.2025

கலைஞர் 100 1924 - 2023






கரூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.